இயக்குநர் இம்மாதிரிப் பொருட்களில் மயில் துத்தம் (Chloral Hydrat) கலந்து உள்ளதாகக் கருத்துத் தெரிவித்திருக்கிறார். தமிழ்நாடு மதுவிலக்கு (சட்டம் 4 (1) (எ) R/W 11 (A) பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கு முதல் வகுப்பு குற்ற வியல் நீதிபதி (மதுவிலக்கு), பொள்ளாச்சி நீதி மன்றத்தில் விசாரணையில் உள்ளது.

இணைப்பு XIV.

(396 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத 185—வினா எண் 16431க்கான விடையைக் காண்க.)

(அ) ஆம். மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழா வினையொட்டி, மகாகவி பாரதியாரின் புகழ் பரப்ப வெளி நாடுகளுக்கு கலைக்குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

(ஆ) மகாகவி பாரதியாரின் புகழ் பரப்ப மகாகவி பாரதி யார் நூற்றாண்டு விழாவினையொட்டி வெளிநாடுகளில், குறிப் பாக தமிழ் மக்கள் வாழும் இடங்களில், மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா நடைபெறும் பொழுது பாரதியாரின் பாடல் கள் அடங்கிய நிகழ்ச்சிகளை மட்டுமே வழங்க மைய அரசின் நிதி உதவியுடன் கலைக் குழுக்களை அனுப்பி வைக்கலாமென்று முடிவு செய்யப்பட்டது. கலைக் குழுக்களை அனுப்பி வைக்கும் மொத்த செலவினத்தில் 50 விழுக்காடு தமிழ்நாடு அரசும, 50 விழுக்காடு மைய அரசிலுள்ள இந்திய கலாச்சார நட்புறவுக் கழகமும் ஏற்றன. இங்கிலாந்தில் இந்திய தூதரகத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட விழாவில் திரு. வலம்புரிஜான் அவர்கள் இலண்டனில் 11—2—1982 அன்று மகாகவி பாரதியார் நூற் றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொள்ள அனுப்பப்பட்டார்.

(இ) அரசின் முடிவின்படி இலண்டனில் நடைபெற்ற மகா கவி பாரதியார் நூற்றாண்டு விழாவிற்கும், பிஜி, ஆஸ்திரேலியா, மற்றும் மலேசியாவில் நடைபெற்ற நூற்றாண்டு விழாக்களுக்கும், மொரீஷியஸ் தீவில் நடைபெற்ற மகாகவி பாரதியார் நூற் றாண்டு விழாவிற்கும் கலைக் குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

(ஈ) இலண்டனில் 11—12—1982 அன்று நடைபெற்ற விழா வில் பங்கேற்க டாக்டர் பத்மா சுப்பிரமணியம் தலைமையில் 7 பேர் அடங்கிய குழு அனுப்பி வைக்கப்பட்டது. ஆஸ்திரேலியா, பிஜி தீவுகள், மலேசியா ஆகிய நாடுகளுக்கு 13—1—1983 முதல் 22—1—1983 வரை செல்வி உமா தண்டாயுதபாணி தலைமையில் 9 பேர் அடங்கிய குழு அனுப்பி வைக்கப்பட்டது. மொரீஷியஸ் தீவுக்கு 4—2—1983 முதல் 14—2—1983 வரை 'பாரதி கண்ணம்மா' நாட்டிய நிகழ்ச்சியினை நடத்த செல்வி வெண்ணிற ஆடை நிர்மலா தலைமையில் 13 பேர் அடங்கிய குழு அனுப்பப்பட்டது.